# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No. 8/2024

PW1– வேலுசாமி நாள்.28.01.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

என்னுடைய சொந்த ஊர் வேப்பந்தட்டை ஆகும். இந்த வழக்கு பிரதிவாதியிடம் ரூபாய் பத்து இலட்சம் பணம் கடனாக கொடுத்து பலமுறை கேட்டும் அவர் திருப்பி கொடுக்கவில்லை என்று இந்த பிராது தாக்கல் செய்துள்ளேன். பணத்தை யார் முன்னிலையில், எங்கு வைத்து கொடுத்தேன் என்று பிராதில் கூறவில்லை என்றால் சரியல்ல. எந்த இடத்தில் வைத்து பணம் கொடுத்தேன் என்று பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ரூபாய் பத்து லட்சம் எனக்கு எந்த வருமானத்தை வைத்து வந்தது என்று பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தற்போது விவசாயம் செய்து வருகிறேன். 2022–ஆம் ஆண்டு விவசாயம் செய்து வந்தேன். எனக்கு ரூபாய் பத்து லட்சம் வருமானம் எப்படி வந்தது என்றால், 2020–ம் ஆண்டிற்கு முன்பு வெளிநாட்டில் வேலை செய்தேன். அந்த வருமானம் ஆகும். வெளிநாட்டில் நான் சம்பாதித்த பணத்திற்கு வருமான வரி செலுத்தியுள்ளேனா என்றால், செலுத்தவில்லை. செலுத்த தேவையில்லை. நான் உண்மையில் என்னுடைய வீட்டில் வைத்து தாவா கடனை கொடுத்திருந்தால், அந்த விவரத்தை பிராதில் சொல்லியிருப்பேன் என்றும், அவ்வாறு கொடுக்காததால்தான் பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதிக்கு நான் ரூபாய் முப்பது இலட்சம் பணம் கொடுத்ததற்கு ஆதாரமாக பிரதிவாதி கொடுத்த காசோலை திருப்பி வந்துவிட்டதாக பெரம்பலூர் JM–I நீதிமன்றத்தில் நான் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு விவரங்களை நான் பிராதில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. நான் வட்டித்தொழில் செய்யவில்லை.

(பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது. )

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.